**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்**

**முன்னிலை – திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஜெயங்கொண்டம்**

**2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1 ஆம் நாள் திங்கள்கிழமை**

**2052 திருவள்ளுவராண்டு, சார்வரி வருடம் மாசி திங்கள் 17 ம் நாள்**

**அசல் வழக்கு எண் (O.S.) 82/2013**

பன்னீர்செல்வம், த.பெ.தாவீது
தென்னூர், ஆரோக்கியபுரம்
உடையார்பாளையம் தாலுக்கா
அரியலூர் மாவட்டம் ... வாதி

/எதிர்/

வேளாங்கன்னி (எ) ஆரோக்கியசாமி
த.பெ.சின்னு
தென்னூர், ஆரோக்கியபுரம்
உடையார்பாளையம் தாலுக்கா
அரியலூர் மாவட்டம் ... பிரதிவாதி

1. தாவா சொத்துக்களை பொறுத்து வாதியின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ இடையூறு செய்யாத வண்ணம் ஒரு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கவும் தாவா செலவுத் தொகை வாதிக்கு கிடைக்கவும் பிரார்த்திக்கிறார்.

| | |
|---|---|
| வழக்குரை நாள் | – 18.04.2013 |
| வழக்குமூலம் ஏற்பட்ட நாள் | – 12.4.2013 முதல் உற்பத்தி |
| இடம் | – ஆரோக்கியபுரம் கிராமம்<br>உடையார்பாளையம் தாலுக்கா<br>அரியலூர் மாவட்டம். |

நீதிமன்ற முத்திரைக் கட்டணத்திற்கும், அதிகார வரம்பிற்கும் தாவா பொறுமானம் ரூ.1,000/– இதற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைத்தாள் கட்டணம் சட்டம் பிரிவு 27(c) – ன்படி ரூ.75.50/– நீதிமன்ற கட்டணமாக செலுத்தப்பட்டுள்ளது.

இவ்வழக்கு என் முன்பாக 5.2.2021 அன்று இறுதியாக விசாரணைக்கு வந்ததில் வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.ஆர்.நடராஜன் அவர்களும், பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.முருகேசன் அவர்களும், முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்குரை, எதிர்வழக்குரை, சாட்சி மற்றும் சான்றாவணங்களைப் பரிசீலித்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்.

<u>தீர்ப்பாணை</u>

1) முடிவாக தாவா அனுமதிக்கப்படுகிறது.

2) வாதி கோரியவாறு, தாவா சொத்துக்களை பொறுத்து வாதியின் அமைதியான அனுபவத்தில் பிரதிவாதியோ, அவரது ஆட்களோ, ஏஜெண்டுகளோ இடையூறு செய்யாத வண்ணம் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்பட்டு தீர்ப்பாணை பிறப்பிக்கப்படுகிறது.

3) செலவுத் தொகை இல்லை.

4) வாதிகளின் செலவுத் தொகை ரூ.2241/- என கணக்கிடப்படுகிறது.

5) பிரதிவாதியின் செலவுத் தொகை ரூ.655/- என கணக்கிடப்படுகிறது.

<u>செலவுத் தொகை விபரம்</u>

| | | வாதி | பிரதிவாதி |
|---|---|---|---|
| நீதிமன்றக் கட்டணம் செலவு | - | 75.50 | -- |
| வக்காலத்து | - | 5 | 5 |
| சம்மன் நோட்டீஸ் படி | - | 10.00 | -- |
| சம்மன்படி | - | | |
| உறுத்துக்கட்டளைப் படி | - | | |
| பிராது தயார் செய்ய/எதிர்வழக்குரை தயார் செய்ய | | 150.00 | 150.00 |
| நீதிமன்ற ஆணையர் ஊதியம் | - | 1500.00 | -- |
| வழக்கறிஞர் ஊதியம் | | 500.00 | 500.00 |
| கூடுதல் | - | 2240.50 | 655.00 |
| முழுதொகையாக | - | 2241.00 | |

**<u>சொத்து விபரம்</u>**

உடையார்பாளையம் தாலுக்கா, தென்னூர் ஆரோக்கியபுரம் சர்வே எண் 202–1 புதிய சர்வே எண் 304–3 ல் கீழ்மேல் காலடி 30, தென்வடல் காலடி 175 இதற்கு நான்கெல்லை – வண்டி பாதைக்கு (வ) வாதி மனைக்கு (கி) சவரிமுத்து மகன் அடைக்கலசாமி நிலத்திற்கு (தெ) பிரதிவாதி மனைக்கு (மே).

2021 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 1ம் நாள் ஆகிய இன்று என்னால் கையொப்பம் இடப்பட்டு இந்நீதிமன்ற முத்திரையுடன் வழங்கப்பட்டது.

(ஒப்பம்)திரு.எம்.பரமசிவம், பி.காம்., பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி
ஜெயங்கொண்டம்.